பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**26 06 2026 FRIDAY 6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** போதைப்பொருள் இல்லா இந்தியாவை உருவாக்க நாட்டு மக்கள் அனைவரும் பாடுபட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

**2)** வருவாய்த்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

**3)** தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை தவெக அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று திமுக வலியுறுத்தியுள்ளது.

**4)** பாலியல் வன்கொடுமை சம்பவங்களை கட்டுப்படுத்த தவெக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று பிஜேபி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.

**5)** ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டி ஜப்பானில் இன்று தொடங்கியது.

. . இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>>

போதைப்பொருள் இல்லா இந்தியாவை உருவாக்க நாட்டு மக்கள் அனைவரும் பாடுபட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக மத்திய இணையமைச்சர் திரு **B L** வர்மா எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் மக்கள் இயக்கமாக உருவெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

வருவாய்த்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு கே ஏ செங்கோட்டையன் கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் நிதிநெருக்கடி உள்ளது என்பதை வெள்ளை அறிக்கை எடுத்துரைப்பதாக தெரிவித்தார்.

***(Sound Byte — செங்கோட்டையன் - 38 Sec. )***

<<<<<<<>>>>>>>

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை தவெக அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று திமுக வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வாக்குறுதியை நிறைவேற்றுவதுபோல் ஏமாற்று அறிவிப்பு வெளியிடப்படுவதாக குற்றம் சாட்டியுள்ளது.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதை தவிர்த்து வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தவெக அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் திமுக கோரியுள்ளது.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் பாலியல் வன்கொடுமை சம்பவங்களை கட்டுப்படுத்த தவெக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று பிஜேபி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த சில நாட்களாக நடைபெற்ற பாலியல் வன்கொடுமை சம்பவங்களை சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டம் — ஒழுங்கை பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் பிஜேபி அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகளில் தூய்மைப்பணிகளை தனியார் பங்களிப்புடன் மேற்கொள்வதற்காக ஆலோசகர்களை நியமிக்க கோரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை மாநில அரசு ரத்து செய்துள்ளது, வரவேற்கத்தக்கது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு வீரபாண்டியன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தூய்மைப் பணியாளர்களின் ஊதியத்தையும், நிரந்தர பணி வாய்ப்பையும் பறிப்பதற்கான எந்த நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளக்கூடாது என்று கூறியுள்ளார்.

தூய்மைப் பணியாளர்களை தமிழக அரசு பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்றும் திரு வீரபாண்டியன் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு சண்முகமும், மாநில அரசின் இந்த முடிவுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

காவிரி — கோதாவரி இணைப்புப் பணிகளை மத்திய அரசு விரைவுப்படுத்த வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த திட்டத்தை செயல்படுத்துவது குறித்து விவாதிப்பதற்காக தென் மாநில முதலமைச்சர்களின் மாநாட்டிற்கு மத்திய அரசு அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

<<<<<<<>>>>>>

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், பத்ம ஸ்ரீ விருது பெற்ற டாக்டர் H V ஹண்டேயை இன்று சென்னையில் சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது, பிரதமர் திரு நரேந்திர மோடியின் 12 ஆண்டு சாதனைகள் மற்றும் நாட்டின் வளர்ச்சிப்பயணம் குறித்த சிறப்பு நூலை மத்திய இணையமைச்சர், டாக்டர் ஹண்டேயிடம் வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து, தினத்தந்தி குழுமத்தின் தலைவர் திரு பாலசுப்பிரமணியனையும், டாக்டர் எல். முருகன் சந்தித்து பேசினார்.

<<<<<<<>>>>>>

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக சாதாரண சாமானியர்களும் பத்ம விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றனர்.

இதன் அடிப்படையில், பத்ம ஸ்ரீ விருதினை பெற்று சேலம் திரும்பிய சிற்பி ராஜா ஸ்தபதிக்கு, கன்னங்குறிச்சி மக்கள் உற்சாக வரவேற்பு அளித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — விஜயகுமார் — 46 Sec. )*

தம்மை போன்ற சாமானியர்களுக்கும் நாட்டின் உயரிய விருது கிடைத்ததற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக ராஜா ஸ்தபதி தெரிவித்தார்.

*(Sound Byte — ராஜா ஸ்தபதி — 45 Sec. )*

<<<<<<<>>>>>>

தென் தமிழகத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் கோவில் தேரோட்டத்திற்காக விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நெல்லை மாநகர காவல்துறை ஆணையர் திரு தேஷ்முக் சேகர் சஞ்சய் கூறியுள்ளார்.

இன்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte — தேஷ்முக் சேகர் சஞ்சய் - 47 Sec.)*

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஆறு நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

திருவண்ணாமலையில் சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, விழிப்புணர்வு மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றது.

-----------------------

நாமக்கல்லில் நடைபெற்ற போதைப்பொருளின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு பேரணியில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

-----------------------

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகே இருசக்கர வாகனத்தில் 12 கிலோ போதைப்பொருளை கொண்டு சென்ற ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-----------------------

மதுரை — கான்பூர் இடையே அடுத்த மாதம் **4**-ஆம் தேதி தொடங்கி, ஆகஸ்ட் மாதம் ஒன்றாம் தேதிவரை சனிக்கிழமைதோறும் சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டி ஜப்பானில் இன்று தொடங்கியது.

இந்தியா முதல் போட்டியில் **2-0** என்ற ஆட்டக்கணக்கில் பிலிப்பைன்ஸை வென்றது.

----------------

இந்தியா — அயர்லாந்து இடையேயான முதலாவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி சற்றுமுன் **Belfast**-ல் தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்ததையடுத்து, அயர்லாந்து பேட் செய்து வருகிறது.

---------------

இலங்கை ’’ஏ’’ அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ’’ஏ’’ அணி வலுவான நிலையில் உள்ளது.

**Galle-யில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று, ஆட்ட நேர இறுதியில் இலங்கை ''ஏ'' அணி முதல் இன்னிங்சில் 2 விக்கெட் இழப்பிற்கு 113 ரன் எடுத்துள்ளது.**

**முன்னதாக, இந்தியா ஏ அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்பிற்கு 452 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.**

**<<<<<<<END>>>>>>**